சலவைப்பட்டறைகள் வைக்கவேண்டுமென்ற நிலைமையை மாற்றி, குறைந்தது 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கவேண்டுமென்ற ஒரு கருத்தும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதையும் இந்த அரசு அமலாக்கும். மேலும் திருப்பூர் போன்ற பகுதிகளில் உள்ள சாயப்பட்டறைகளுக்கு என்று தனியாக தொழில் பேட்டை அமைக்கும் நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறது. தேவைப்பட்டால் ஈரோடு பகுதியில் இருக்கிற சாயப்பட்டறைகளையும் ஈரோடு நகருக்கு வெளியில் தொழில் பேட்டையாக அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கும். ஆனால் இப்போதிருக்கிற பிரச்சினை என்னவென்றால், அந்த சாயப்பட்டறைகளை நிறைய பேர் குடிசைத் தொழிலாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசு இப்போது நடவடிக்கை எடுத்தால், பல்வேறு தொழிலாளர்களுக்கு மட்டுமல்லாமல், சிறிய சிறிய தொழிலதிபர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அந்தத் தொழிலும் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இப்போது அந்த சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நடவடிக்கையை அரசு தீவிரமாக எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 130, திரு. டி. சாத்தையா, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர். (குறுக்கீடு) இவர் தொகுதியும் அதில் வருகிறது. அதனால்தான் கேட்கிறார்.

130--

சுகாதாரக்கேட்டைத் தவிர்க்க நடவடிக்கை

*88168--திரு. தி. சாத்தையா:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராஜபாளையம் தொகுதியில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் இராஜபாளையம் கேட்டில் உள்ள ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் தொழிற்சாலையில் இருந்து வெளிவரும் கழிவுநீர் மற்றும் துர்நாற்றம் ஆகியவற்றால் ஏற்படும் சுகாதாரக்கேட்டைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அவர் தொகுதியா அல்லது அவருக்கு வேண்டாத ஆளா என்று தெரியவில்லை. (சிரிப்பு)

1996 பிப்ரவரி 26]

(அ) மற்றும் (ஆ): காமராஜர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், இடையன்குளம் கிராமத்தில் அமைந்துள்ள திருவாளர்கள் ஸ்ரீராம் ஜெல் கெம் இண்டஸ்டிரீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் கழிவு நீர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்துள்ள தரவரைமுறைகளுக்குட்பட்டு சுத்திகரிக்கப்படாமல், அதிக மாசுடன் வெளியேற்றப்பட்டதால், வாரியம் தனது 12-2-1995 நாளிட்ட ஆணையில் மேற்படி நிறுவனத்தை மூடும்படி ஆணை பிறப்பித்தது. மேலும் மின்சாரத்தைத் துண்டிக்கும்படி, மின்சார வாரியத்திற்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. அந்த ஆணையை எதிர்த்து, அந்த நிறுவனம் 1-3-1995 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடையுத்தரவைப் பெற்று, தொடர்ந்து இயங்கிவருகிறது. இடைக்காலத் தடையுத்தரவை நீக்க, மாசு கட்டுப்பாடு வாரியம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீராம் கெமிக்கல்ஸ் தொழிற்சாலை என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ளது. அங்கே எனக்கு வேண்டாதவர்கள் கிடையாது. பொதுமக்களுக்கு வேண்டாதவர்கள் இருக்கிறார்கள். கோர்ட்டில் எதற்குத்தான் ஸ்டே கொடுக்கிறார்கள் என்று எனக்கே தெரியவில்லை. இதனால் ஆயிரக்கணக்கான நிலங்கள் பாதிக்கப்படுகின்றன. பத்துக்கு மேற்பட்ட கிராமங்களில் உள்ள குடிநீரும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, அந்த கெமிக்கல்ஸ் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அங்கே உள்ள கழிவுநீர் ஆவியாகி மேல்நோக்கிச் செல்வதற்கும், துர்நாற்றம் இல்லாமல் இருப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை கோர்ட் மூலமாகவோ, அரசோ தீவிரமாக எடுக்கவேண்டும். அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **என்றெல்லாம் கேட்கக்கூடாது. அது எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்காது.

திரு. இரா. தாமரைக்கனி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் கேட்கக்கூடாது என்றேன். இவையெல்லாம் அவைக் குறிப்பில் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[*1996 பிப்ரவரி 26*

திரு. இரா. தாமரைக்கனி: **அரசு காரணம் இல்லை என்று தெரிகிறது. ** அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

ஒன்று கழிவுநீர் ஆவியாக போக வேண்டும். துர்நாற்றம் இல்லாமல் இருக்க வேண்டும். அங்கேயுள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். இது தான் அரசினுடைய கொள்கை, எங்களுடைய கொள்கையும் ஆகும்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டம், இராசபாளையம் வட்டத்தில் இருக்கிற இடயனேந்தல் கிராமத்தில் இருக்கிற நிறுவனம் 19–5–1975 முதல் இயங்கி வருகிறது. மேற்படி நிறுவனம் பிராணிகளின் நீர்கோர்த்த சதைகளிலிருந்து மாதம் ஒன்றுக்கு 15 டன்கள் தொழில் ரீதியான வஜ்ஜிரம் தயாரிக்கப்படுகிறது. பிராணிகளின் நீர் கோர்த்த சதைகளை சுண்ணாம்புடனும், ஹைட்ரோ குளோரிக் அமிலத்துடனும் சேர்த்து ஊரவைத்த பின்னர் நீரால் அவற்றை கழுவி இதனை சேகரிக்கிறார்கள். பின்னர் அதனை வடிகட்டி, ஆவியாக்கி, உலர வைத்து, பொடியாக்கி, பைகளில் அடைத்து அனுப்புகிறார்கள். இந்த நிறுவனம் தினமும் 0.5 கிலோ லிட்டர் வடிகால் கழிவு நீரை வெளியேற்றுகிறது. இந்தக் கழிவு நச்சுத் தடை தொட்டி மூலம் சுத்திகரிக்கப்பட்டு பரவலாக்கப்பட்ட கால்வாய் மூலமாக வெளியேற்றப்படுகிறது. மேலும் தினமும் 15 கிலோ லிட்டர் தொழிற்சாலை கழிவு நீரை தொழிற்சாலை வெளியேற்றுகிறது. இந்த நிறுவனத்திற்கு 24-10-1984 ஆம் நாளன்று இசைவாணை ஓராண்டுக்கு தொழிற்சாலை கழிவுநீரை சுத்திகரிக்க தேவையான சுத்திகரிப்பு நிலையத்தை இசைவாணை வழங்கிய 3 மாதங்களுக்குள் அமைக்க வேண்டுமென்று நிபந்தனையுடன் அளிக்கப்பட்டது. இந்த நிறுவனம் தொழிற்சாலை கழிவு நீரை சரியாக சுத்திகரிக்காத காரணத்தால் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அதை பரிசோதனை செய்து நிறுவனத்தை மூடும்படி உத்தரவிட்டது. மின்சார இணைப்பையும் துண்டித்தது. ஆனால் அதற்குள் நீதிமன்றத்திற்கு சென்று தடையாணை வாங்கப்பட்டு விட்டதால் மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தினுடைய கைகள் கட்டப்பட்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1996 பிப்ரவரி 26]

இருக்கின்றன. இருந்தாலும் அந்த தடையாணையை உடனடியாக அகற்றுவதற்கு வாரியத்திற்கு உத்தரவிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 131, திரு. ஓ.எஸ். அமர்நாத், மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

131--

கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் தேக்கம்

23543*--திரு. ஓ.எஸ். அமர்நாத்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மதுரையிலுள்ள திருவள்ளுவர் கிருஷ்ணாபுரம் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் உற்பத்தியாகிற துணிகள் தேங்கிக் கிடப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு அத்துணிகளை எடுத்துக்கொண்டு நெசவாளர்களுக்கு உரிய தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) அரசு ஆவன செய்துள்ளது.

திரு. ஓ.எஸ். அமர்நாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் என்னுடைய தொகுதியில் தான் நெசவாளர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். நெசவுத் தொழிலை மேற்கொண்டு வருகிறார்கள். என்னுடைய தொகுதியில் திருவள்ளுவர் மற்றும் கிருஷ்ணாபுரம் கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் உற்பத்தி செய்கிற துணிகள் அதிகமாக தேங்கிக் கிடக்கின்றன. அதை அரசு கொள்முதல் செய்திருக்கிறதா? அப்படி கொள்முதல் செய்திருக்கிறபட்சத்தில் உடனடியாக அரசு அதற்கான தொகையை வழங்கி இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் ஒரு உற்பத்தித் திட்டத்தை